# Padasalai's

## Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group
https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group
https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group
https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group
https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group
https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group
https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group
https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group
https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group
https://t.me/Padasalai_1to5

- TET - Group
https://t.me/Padasalai_TET

- PGTRB - Group
https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group
https://t.me/Padasalai_TNPSC

ஈ.கே.எம்.அப்துல் கனி மதரஸா இஸ்லாமிய உயர்நிலைப் பள்ளி,

எட்டாம் வகுப்பு - தமிழ்

குறு வினா விடைகள்

1.யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவை இல்லை?

கல்வி கற்றவர்

2.யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?

மன்னிக்கத் தெரிந்த மனிதன்

3.பகைவரிடம் நாம் நடந்து கொள்ள வேண்டிய முறை யாது?

அன்பு காட்டுதல்

4. இன்றைய கல்வியின் நிலை பற்றி திருவிக கூறுவன யாவை?

இக்காலத்தில் கல்வி பொருள் இல்லாமல் கிடைக்கிறது. மனப்பாடம் செய்து பட்டம் பெறுவது ,அதன்மூலம் வேலைக்குச் செல்வது.

2)தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?

தாய்மொழி கொண்டு

5.திரு.வி.க. சங்கப் புலவர்களாகக் குறிப்பிட்டுள்ளவர்களின் பெயர்களை எழுதுக.

இளங்கோ, திருத்தக்கதேவர், ஆண்டாள் சேக்கிழார் ,கம்பர்

6.தமிழர் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக் கருவிகளாக சுந்தரர் கூறுவன யாவை?

புல்லாங்குழல் மற்றும் முழவு

7.பண்பு ,அன்பு ஆகியவை பற்றி கலித்தொகை கூறுவன யாவை?

1.சான்றோர் வழி நடத்தல்

2.உறவினரோடு வெறுப்பில்லாமல் வாழ்தல்

8.முறை ,பொறை என்பவற்றுக்கு கலித்தொகை கூறும் விளக்கம் யாது?

தவறு செய்தவருக்கு சரியான தண்டனை கொடுத்தல்.

நம்மைத் திட்டுபவரையும் பொறுத்துக் கொள்ளுதல்.

9. எவற்றையெல்லாம் கைவினைக் கலைகள் என்று கூறுகிறோம்?

மண் பொம்மை ,மரப் பொம்மை ஆகியவை செய்தல், மூங்கில் ,பிரம்பு ,மணல் ஆகியவற்றின் மூலம் பொருள் செய்தல்.

10.மண்பாண்டம் ,சுடுமண் சிற்பம் ஒப்பிடுக.

களிமண்ணை ஊறவைத்து சக்கரத்தில் வைத்து பொருள் செய்வது மண்பாண்டம்.

களிமண்ணால் செய்த பொருள்களைச் சுட்டெரித்து செய்யப்படுபவை சுடுமண் சிற்பங்கள்.

11.பனையோலையால் உருவாக்கப்படும் பொருட்கள் யாவை?

கிலுகிலுப்பை , பொம்மை ,தொப்பி , கயிறு, கட்டில் .

12.நன்மை தரும் செயலை ஒருவரிடம் ஒப்படைக்கும் வழியாது?

செயலைச் சரியாக முடிப்பவரை ஆராய்ந்து ஒப்படைத்தல்.

ஈ.கே.எம் ஃபாத்திமா பேகம் (watermark)

13.சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருவள்ளுவர் கூறுவது யாது?

நடுவு நிலைமையில் ஆட்சி செய்தல்

14.அரசின் தண்டிக்கும் முறை யாது?

குற்றத்தை ஆராய்ந்து, குற்றம் மீண்டும் நடைபெறாது தண்டிப்பது.

15. சிறந்த சொல்லாற்றல் கொண்டவாரின் இயல்பு என்ன?

கேட்காத வரையும் கேட்க வைத்தல்

16. பயிர்கள் வாட்டம் இன்றி கிளைத்து வளர தேவையானது எது?

சரியான நேரத்தில் பெய்யும் மழை

17.உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?

நெல்லைப் பிரித்து எடுக்கும் காலத்தில்

18.மழைச் சோறு பாடலில் உழவர் படும் வேதனை எவ்வாறு சுட்டப்படுகிறது ?
பயிர்களும் செடிகளும் வளரவில்லை குழந்தைகளின் பசியைப் போக்க முடியவில்லை.

19. மக்கள் ஊரை விட்டு வெளியேற காரணம் என்ன?

மழை இல்லாததால் , உழவுத் தொழில் செய்ய முடியாமல் வெளியேறுகின்றனர்.

20.மூவேந்தர்களின் காலம் குறித்து எழுதுக.

பல நெடுங்காலத்திற்கு முன் தோன்றியவர்கள்.

21.கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை

காவிரி ,பவானி ,நொய்யல், அமராவதி.

22.தமிழ்நாட்டின் ஹாலந்து என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?

திண்டுக்கல். மலர் உற்பத்தியில் முதலிடம்

சிறு வினா விடை

1. நீதிநெறி விளக்கப் பாடல் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

மணி அணிகலன்களுக்கு வேறு அணிகலன்கள் தேவையில்லை. கல்வி கற்றவருக்கு கல்வியே அழகு.

2. புத்தியை தீட்டு வாழவேண்டிய முறைகளாக கவிஞர் கூறுவன யாவை?

திறமையைக் காட்ட வேண்டும். அறிவுக்கு வேலை கொடுத்து, அமைதி காக்க வேண்டும் .பகைவரிடமும் அன்பு காட்ட வேண்டும் .மன்னிக்கும் உள்ளம் மாணிக்கக் கல் போன்றது.

3.தமிழ் வழி கல்வி பற்றி திரு. வி .க கூறுவனவற்றை எழுதுக.

அறிவு கலையைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும். கலைகளை அனைத்தையும் தாய்மொழியில் கொண்டுவர வேண்டும்.

4.அறிவியல் கல்வி பற்றி திரு .வி .க கூறுவன யாவை?

அறிவியல் முக்கியமானது. உலகத்தோடு தொடர்பு கொள்ள அறிவியல் தேவை எனவே அதை இளைஞர்கள் கற்க வேண்டும்

5. எழுவாய் வேற்றுமை விளக்குக.

உருபுகள் இல்லாமல் எழுவாய் தனியாக நின்று பொருள் தருவது எழுவாய் வேற்றுமை. சான்று -கண்ணன் வந்தான்

Padasalai
ச.சேகர் பட்டதாரி ஆசிரியர்

6.திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு பரணி வருணனை செய்கிறார்?

தமிழ்ப் பாடலுக்குப் புல்லாங்குழலும் முழவும் ஒலிக்கும். நீர்நிலைகள் நீர் திவலைகளை வாரி இறைக்கும் .யானை மணிகளை வாரி வீசும்.

7.பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறுக.

பிரம்பை நெருப்பில் காட்டி ,சூடுபடுத்தி கம்பி போல வளைத்து ,பிறகு தேவையான பொருள் செய்யலாம்.

8.மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.

தட்டு , கூடை ,முறம், ஏணி ,துடைப்பம் கட்டில்.

9.தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும் ?அவை யாவை?

ஆறு வகைப்படும் .வேற்றுமைத்தொகை , வினைத்தொகை முதலியன.

10. இரவு பகல் என்பது எவ்வகை தொடர் என விளக்குக.

உம்மைத்தொகை. உம் என்ற சொல் மறைந்து வருதல்.

11. உழவுத் தொழில் பற்றி தகடூர் யாத்திரை கூறுவன யாவை?

மழையால் நெற்கதிர்கள் வளர்ந்துள்ளன. அதனை அறுவடை செய்து அடித்து நெல்லாக பிரித்து எடுக்கின்றனர். அந்தச் சத்தம் கேட்டு நாரைகள் பிரிந்து செல்கின்றன.

12.கோலம் கரையாத நிலையை மழைச்சோறு பாடல் எவ்வாறு விளக்குகின்றது?

வாளி மற்றும் பானையில் மாவைக் கரைத்து கோலம் போட்டனர். அதை கரைக்க மழை வரவில்லை.

13.மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.

கடலைச் செடி ,முருங்கை செடி, கருவேலம் ஆகியவை மழையில்லாமல் வளரவில்லை.

14.மழைச் சோறு எடுத்து பின் எவ்வாறு மழை பெய்தது?

பேய் மழையாக ஊரெல்லாம் பெய்தது.

15.கொங்கு மண்டல சதகம் கூறும் கொங்கு மண்டலத்தில் எல்லைகள் யாவை,

1.பெரும்பாலை 2.பழனிமலை

3.வெள்ளிமலை 4.மதிற்கரை

16.கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளை சுருக்கி எழுதுக.

கல்குவாரித் தொழிற்சாலை ,கைத்தறி நெசவு ஆடை தொழிற்சாலை ,பேருந்து கட்டுமானத் தொழில்.

17.இயல்பு புணர்ச்சி எடுத்துக்காட்டு விளக்கு

எவ்வித மாற்றமும் இல்லாமல் சேருவதை இயல்பு புணர்ச்சி ஆகும்.சான்று -தாய்மொழி

விரிவானம்-ஆன்ற குடிப்பிறத்தல்

1.திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையை சுருக்கி எழுதுக.

1. துவைத்துப் போட்ட தலைமை ஆசிரியரின் வேட்டி காணாமல் போய்விட்டது.

2.சிகாமணி திருடியதாக ஊரார் கூறினர்.

3.ஆசிரியர் நடத்திய திருக்குறள் பாடத்தைத் கேட்டு சகாதேவன் தன் தந்தை திருடிய வேட்டியை கொடுத்து அனுப்புகிறான்.

4.ஊரார் சிகாமணியே தண்டிக்க சொல்கிறார்கள்.

5.சகா தேவனுக்காக ஆசிரியர் மன்னிக்கிறார்.

2.காற்றுக் கருவிகள் குறித்து செய்திகளை தொகுத்து எழுதுக

1.காற்றைப் பயன்படுத்தி செய்யும் கருவிகள் காற்றுக் கருவிகள் ஆகும்

2.புல்லாங்குழல் சங்கு கொம்பு ஆகியவை காற்றுக் கருவிகள்.புல்லாங்குழல் மூங்கில் சந்தனம் ஆகிய மரத்தால் செய்யப்படுகிறது.

3.கொம்பு இறந்த மாடுகளின் கொம்பை பயன்படுத்தி செய்யப்படுகிறது. திருவிழாவில் கொம்பை ஊதுவார்கள்.

4.கடலில் இருந்து கிடைப்பது சங்கு அதையும் இசைக்க பயன்படுத்துவார்கள்

3.காலம் உடன் வரும் கதையை சுருக்கி எழுதுக.

1.அவசர வேலைக்காக சுப்பிரமணியம் பாவு இணைக்க ஆளைத் தேடுகிறார்.

2.நண்பர் ரகு அதற்கு உதவி செய்கிறார்.

3.ஒச்சம்மாவை பாவு இணைக்க சுப்பிரமணியம் அழைத்துச் செல்கிறார்.

4.சுப்ரமணியம் வேலை முடிந்ததும் ,அவளை வீட்டில் கொண்டு வந்து சேர்க்கிறார். இரட்டைச் சம்பளமும் தருகிறார்.

கடிதம் எழுதுக.

இருப்பிடச்சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

அனுப்புநர்

________________________________

18 , தமிழ் நகர், ஈரோடு -638001.

பெறுநர்

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்

வட்டாட்சியர் அலுவலகம்,ஈரோடு.

மதிப்புக்குரிய அய்யா,

பொருள் - இருப்பிடச் சான்றிதழ் வேண்டுதல் சார்பாக.

வணக்கம் .நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகின்றோம். .இருப்பிடச் சான்றிதழ் தேவைப்படுகின்றது. எனக்கு இருப்பிடச் சான்றிதழ் வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நன்றி!

இடம் - ஈரோடு இப்படிக்குத்
நாள் --- தங்கள்உண்மையுள்ள

______________________

உறைமேல் முகவரி

பெறுநர்
உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம், ஈரோடு.

பொதுக்கட்டுரை - நூலகம்

1.மைய நூலகம், கிளை நூலகம், ஊர்ப்புற நூலகம் ,தனியார் நூலகம்எனப் பலவகை நூலகங்கள் உள்ளன.

2.கதை ,கவிதை, கட்டுரை , நாளிதழ்கள், வார இதழ்கள் ,மாத இதழ்கள் ,அகராதிகள் ஆகியவை நூலகத்தில் உள்ளன.

3.நூலகத்தில் நூல்களை எடுத்து அமைதியாகப் படிக்கவேண்டும்.

**ஆக்கம் ,**

**ச.சேட்டு மதார்சா,**
**எம்ஏ,எம்.ஏ,எம்.பில் ,பி.ஹெச்.டி, பி.எட், பிஜிடிடிஆர்,டிப்.போக். டிப்.அனிமேசன்.**

**பட்டதாரி ஆசிரியர் - தமிழ்**

**ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா நிதிஉதவி உயர்நிலைப் பள்ளி,**

**ஈரோடு - 638 001.**

**அலைபேசி - 8883681115**